இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

விழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 193 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 10 – சனிக்கிழமை 22 பிப்ரவரி 2025 – வெளியூர் 24 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 193 : Thiruvalluvar Year - 2056 - Maasi 10 - Saturday 22 February 2025 - Dak 24 Pages ₹ 5.00



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று, (21.2.2025) கடலூர் சென்ற வழியில் திண்டிவனம் சந்திப்பில் – கழகத்தினர், பொதுமக்கள் பல்லாயிரவர் திரண்டு அளித்த உற்சாக வரவேற்பு.

## கடலூர் சென்ற வழிநெடுகிலும் கழகத் தலைவருக்கு எழுச்சிமிகு வரவேற்பு !

# கடலூரில் 45 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார் !

## ரூ.704 கோடியில் முடிவுற்ற 602 பணிகளைத் திறந்து வைத்தார் ! ரூ.384 கோடியில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிப் பேருரை !

**கடலூர், பிப். 22-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று - கடலூர் மாவட்டத்தில் ரூ.1,476 கோடியில் 6,68,000 பொதுமக்கள் பயன் பெறும் ரூ.479 கோடி மதிப்பிலான குடிநீர் வழங்கும் திட்டம் உட்பட 602 முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, 178 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 45 ஆயிரம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிச் சிறப்புரையாற்றினார்.**

**முன்னதாக சென்னையில் இருந்து சாலை மார்க்கமாகச் சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, விழுப்புரம் மாவட்டம் – திண்டிவனத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., தலைமையில் கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். வழிநெடுகிலும் இளைஞர்கள், பெண்கள் என ஏராளமான மக்கள் திரண்டு முதலமைச்சருக்கு வரவேற்பு அளித்தனர்.**

**விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பிலும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. மத்திய மாவட்டப் பொறுப்பாளரும் விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான லட்சுமணன் தலைமையில் ஆயிரக்கணக்கான கழகத்தினரும், பொதுமக்களும் திரண்டிருந்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.**

இதைத்தொடர்ந்து, புதுச்சேரி எல்லையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு புதுச்சேரி மாநில தி.மு.க. சார்பில் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரும், மாநில அமைப்பாளருமான இரா.சிவா தலைமையில், புதுச்சேரி தமிழ்நாடு எல்லையான கோரிமேடு பகுதியில் ஏராளமான தி.மு.க. வினர், மேளதாளங்கள் முழங்க உற்சாக வரவேற்பு அளித்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ‘திராவிட மாடல்’ ஆட்சியில் நான்கு ஆண்டுகளாக நிறைவேற்றி வரும் பல்வேறு புரட்சிகரமான திட்டங்கள் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவற்றை அந்தந்த மாவட்டங்களுக்கு நேரடியாகச் சென்று கள ஆய்வு செய்து வருகிறார்கள்.

இதன் தொடர்ச்சியாக, கடலூர் மாவட்டத்தில் நேற்றும் (21.2.2025), இன்றும் (22.2.2025) இரண்டு நாள்கள் ஆய்வுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

கடலூர் நகரம் மஞ்சக்குப்பம் மைதானத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் பிரம்மாண்டமான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

### 12,226 பயனாளிகளுக்கு ரூ.164 கோடி மதிப்பீட்டில் நல உதவிகள்!

இந்த விழாவில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 11,716 பயனாளிகளுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் பட்டா உதவிகள் வழங்கப்பட்டன. 84 பயனாளிகளுக்கு கல்வி உதவித் தொகை, 61 பயனாளிகளுக்கு திருமண உதவித் தொகை உள்ளிட்ட 12,226 பயனாளிகளுக்கு ரூ.164 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நல உதவிகள் வழங்கப்பட்டன.

### 5,025 பயனாளிகளுக்கு ரூ.55.33 கோடி மதிப்பீட்டில் குடியிருப்புகள்!

ஊரக வளர்ச்சித் துறை சார்பில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் மூலம் 500 பயனாளிகளுக்கு குடியிருப்புகள் வழங்கப்பட்டன. பழங்குடியினர் குடியிருப்புகள் திட்டத்தின் கீழ் 225 பயனாளிகளுக்கும், புனரமைக்கப்பட்ட ஊரகக் குடியிருப்புகள் திட்டத்தின் மூலம் 4,300 பயனாளிகளுக்கும் என மொத்தம் ரூ.5,025 பயனாளிகளுக்கு ரூ.55.23 கோடி மதிப்பீட்டில் நலத் திட்டஉதவிகள் வழங்கப்பட்டன.

ரூ.107 கோடி மதிப்பில் தமிழ்நாடு மாநில நகர்ப்புற / ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 16,815 குழுக்களை சேர்ந்தவர்களுக்கு வங்கிக் கடன் ;

வேளாண் பொறியியல் துறை சார்பில் 36 பயனாளிகளுக்கு பவர் டில்லர், 13 பயனாளிகளுக்கு பவர் வீடர், 1 பயனாளிளுக்கு கரும்பு அறுவடை இயந்திரம், 2 பயனாளிகளுக்கு உழுவை இயந்திரம் ; 2,121 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன.

மாற்றுத் திறனாளிகள் நலத்துறை சார்பில் 516 பயனாளிகளுக்கு ரூ.5.25 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் உட்பட பல்வேறு துறைகள் மூலம் மொத்தம் 44,690 பயனாளிகளுக்கு ரூ.387.66 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் ஆகியவை வழங்கப்பட்டன.

### அடிக்கல் நாட்டுதல்!

முதல்வரின் கிராமச் சாலைகளின் திட்டத்தின் கீழ் 110 சாலைப் பணிகள், 10 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் முதலிய 133 புதிய திட்டப் பணிகளுக்கு ரூ.120.81 கோடி மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டப்பட்டது.

பள்ளிக் கல்வித்துறை சார்பில், ரூ.21.25 கோடி மதிப்பீட்டில் 75 வகுப்பறைக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

ரூ.173.39 கோடி மதிப்பீட்டில் 148.7 கி.மீ. நீளத்திற்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் மற்றும் சுத்திகரிப்பு நிலையம், 26.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5,409 குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகிக்கும் திட்டம், ரூ.16.13 கோடி மதிப்பீட்டில் பண்ருட்டி பலா மதிப்புக் கூட்டு மையம் உட்பட பல்வேறு துறைகள் சார்ந்த ரூ.384.41 கோடி மதிப்பீட்டிலான 178 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## கடலூர் மாவட்டம் – திருப்பயரில் இன்று – தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் – ஆசிரியர் கழகத்தின்

# ‘பெற்றோரைக் கொண்டாடுவோம்’ மண்டல மாநாடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

**கடலூர், பிப். 22-**

**பள்ளிக் கல்வித் துறை சார்பில், இன்று - கடலூர் மாவட்டம் - விருத்தாசலம் - வேப்பூர் அருகில் திருப்பயரில், “தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் - ஆசிரியர் கழகத்தின்” “பெற்றோரைக் கொண்டாடுவோம்!” மண்டல மாநாடு மிகுந்த எழுச்சியுடன் நடைபெறுகிறது.**

**மாநிலப் பெற்றோர் - ஆசிரியர் கழகத்தின் தலைவரான பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னின்று சிறப்புற நடத்தும் இம்மாநாட்டில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு விழாப் பேருரையாற்றுகிறார்.**

**இம்மாநாடு பற்றிய விவரம் வருமாறு:-**

இந்திய வரலாற்றிலேயே, முதன் முதலாக தமிழகத்தில் ‘பெற்றோரைக் கொண்டாடுவோம்’ மாநாடு நடத்த தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவின் பேரில், பள்ளிக் கல்வித்துறை அமைச்சரும், பெற்றோர் – ஆசிரியர் கழக மாநில தலைவருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி திட்டம் வகுத்துக் கொடுத்தார்.

அதைத்தொடர்ந்து, தமிழகத்தை 7 மண்டலங்களாகப் பிரித்து, மாநாடு நடத்த முடிவு செய்யப்பட்டது. அதில், மதுரையில் முதல் மண்டல மாநாடு நடைபெற்றது. இதில், பெற்றோர்கள் ஆயிரக்கணக்கில் ஆர்வமாகக் கலந்துகொண்டு ஆதரவு தெரிவித்தனர்.

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் முன்னெடுப்பு!

அதனைத் தொடர்ந்து, திருச்சி, தர்மபுரி, கோவை, காஞ்சிபுரம், திருநெல்வேலியில் மண்டல மாநாடுகள், பெற்றோர் - ஆசிரியர் கழக நிர்வாகிகள் ஆதரவுடன், வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டன. மேலும், அவர்களின் விருப்பத்தின் பேரில், 7 வது மண்டல மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்கிறார்கள் என்பது இம் மாநாட்டின் சிறப்பாகும்.

இந்த மாநாடுகளில் பெற்றோர் – ஆசிரியர் இடையே நல்லிணக்கம் ஏற்படுவதால், மாணவர்களின் கல்வித் தரம் உயர அது வழிவகை செய்கிறது. மேலும், பள்ளிக் கல்வித் துறைக்கு, தமிழக முதல்வர் 70 திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி, மாநாடுகளின் வழியாக விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார்.

இந்த மாநாடுகளில் அரசுப் பள்ளிகளுக்கு, பொருள், நிலங்களை நன்கொடையாக வழங்கியவர்கள் கௌரவப் படுத்தப்படுகின்றனர் என்பது மேலும் ஓர் கூடுதல் சிறப்பாகும்.

இந்நிலையில், இன்று, (22.2.2025 - சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் கடலூர் மாவட்டம் – வேப்பூரை அடுத்த திருப்பயரில், ஜெயப்பிரியா மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி அருகே பள்ளிக்கல்வித் துறை சார்பில் நடைபெறும். ‘பெற்றோரைக் கொண்டாடுவோம்’ 7வது மண்டல மாநாடு நடைபெறுகிறது.

தமிழ்நாடு மாநில பெற்றோர் - ஆசிரியர் கழக மாநிலத் துணைத் தலவர் பி.வி.பி. முத்துக்குமார் வரவேற்புரையாற்றுகிறார்.

பள்ளிக் கல்வித்துறை அரசு முதன்மைச் செயலாளர் மரு.பி.சந்திரமோகன் திட்ட விளக்கவுரையாற்றுகிறார்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## எம்மொழிக்கும் சளைத்ததல்ல எம் மொழி!

# உலகெங்கும் பரவட்டும் நம் உயர்தனிச் செம்மொழி!

### உலகத் தாய்மொழி நாளையொட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, பிப்.22-**

**உலகத் தாய்மொழி நாள் நேற்று! இந்நாளையொட்டி கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப் பதிவில், “எம்மொழிக்கும் சளைத்ததல்ல எம் மொழி! உலகெங்கும் பரவட்டும் நம் உயர் தனிச் செம்மொழி!” எனச் சூளுரைத்துள்ளார்.**

உலகத் தாய்மொழி நாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



எம்மொழிக்கும் சளைத்ததல்ல எம் மொழி!

இலக்கியங்களில் புதைந்திருந்த வரலாற்றினை மண்ணில் அகழாய்ந்து நிறுவி வருகிறோம்!

அகத்திலும் புறத்திலும் அன்பும் வீரமும் கொண்டு வாழும் நற்றமிழர் தாய்மொழி, போற்றுதலுக்குரிய பழமை உடைய மொழி மட்டுமல்ல; பிறமொழித் துணையின்றித் தனித்து இயங்கும் ஆற்றல் கொண்ட செம்மொழி!

உலகெங்கும் பரவட்டும் நம் உயர்தனிச் செம்மொழி!

இவ்வாறு அப்பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.